பாடப் புத்தகத்தின் 102ஆவது பக்கத்தில் உள்ள உப அலகு **“ சூழலைப் பாதுகாப்போம்”** என்ற பகுதியை வாசித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

எம்மைச் சுற்றியுள்ள அனைத்தும் எமது சூழலாகும். சூழலை இரண்டு பிரதான பகுதிகளாகப் பிரிக்கலாம்.

i. **பௌதீகச் சூழல்**

மனிதனின் தலையீடின்றி இயற்கையாகவே உருவான சூழல் பௌதீகச் சூழல் ஆகும்.

ii. **நிர்மாணிக்கப்பட்ட சூழல்**

சுற்றுச் சுழலில் மனிதனின் தலையீட்டுடன் ஏற்படுத்தப்பட்டவை நிர்மாணிக்கப்பட்ட சூழல் ஆகும்.

❖ **பயிற்சி**

01. பௌதீகச் சூழலுக்கும் நிர்மாணிக்கப்பட்ட சூழலுக்கும் உரித்தான விடயங்கள் 5 வீதம் குறிப்பிடுக.

02. மக்கள் தொகைப் பெருக்கம் இ தேவைகளின் அதிகரிப்பு என்பவற்றால் சூழலுக்கு உள்ள அச்சுருத்தல் அதிகம் . உங்களுக்கு தெரிந்த சூழல் பகுதிகள் 2ஐக் குறிப்பிட்டு அவை மாசடைவதற்கு ஏதுவான காரணிகள் 2 வீதம் குறிப்பிடுக.

03. ஒரு சிறந்த பிரசை என்ற வகையில் சூழலைப் பாதுகாக்க பங்களிப்பு செய்யக்கூடிய வழிகள் 8ஐக் குறிப்பிடுக.

04. “ சூழலைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம்” என்ற தலைப்பில் சுவர் பத்திரிகை ஒன்றில் காட்சிப்படுத்துவதற்கு கட்டுரை ஒன்றை எழுதுக.